செய்தி வெளியீடு எண்:404 நாள்:20.07.2009

# தீ விபத்து பற்றிய அறிக்கை

இன்று 22.07.2009 அதிகாலை 1.00 மணியளவில் கொருக்குப்பேட்டை, ஜெ.ஜெ.நகரில் ஏற்பட்ட தீவிபத்தில் சுமார் 30 குடிசைகள் எரிந்து சாம்பலாகின. இவ்விபத்தில் 2 பெண்கள், 1 ஆண் மற்றும் 2 குழந்தைகள் ஆகமொத்தம் 5 நபர்கள் இறந்து விட்டனர். இப்பகுதி கொருக்குப்பேட்டை நடைபாதைவாசிகள் திட்டத்திற்கு வெளியே பொதுப் பணித் துறைக்கு சொந்தமான பக்கிங்காம் கால்வாய் கரையோரங்களில் ஆக்கிரமித்து கட்டப்பட்ட குடிசைகளாகும். தீவிபத்து ஏற்பட்ட பகுதிக்கு சென்னை மாநகராட்சி மூலம் உணவு மற்றும் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது. மாநகராட்சியின் மருத்துவர் குழு விபத்து நடந்த இடத்தில் முகாமிட்டுள்ளனர்.

மேற்படி தீவிபத்து பகுதியை மாண்புமிகு குடிசை மாற்றுத் துறை அமைச்சர் திரு.சுப.தங்கவேலன், புரசைவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.எஸ்.பாபு, வாரியத்தின் அதிகாரிகள், வார்டு குழுத் தலைவர் திரு.டன்லப் ரவி மற்றும் உறுப்பினர்கள் பார்வையிட்டனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் சுப.தங்கவேலன் ஆறுதல் கூறினார்.

அ.டேனியல் ஏசுவடியான்
நிர்வாகப் பொறியாளர்
கோட்டம்–1
குடிசைப்பகுதி மாற்று வாரியம்
சென்னை–600 010.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9